19421

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.
- ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

● **1** தொடக்கம் **15** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் மாத்திரம் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**1.** அரசியல் விஞ்ஞானக் கற்கையின்போது கவனத்திற் கொள்ளப்படுவது:
A – அரசியல் சமூகங்கள் எதிர்கொள்ளும் அரசியல் பிரச்சினைகளையாகும்.
B – அவ்வரசியல் பிரச்சினைகளை முகாமைப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய கருவிகளையாகும்.
C – மனிதர்கள் அரசியலில் ஈடுபடுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையாகும்.
D – சமயச் சார்பற்ற வாழ்விலிருந்து மனிதர் விடுபடுவதற்கு உதவும் மிகச் சிறந்த அரசாட்சி முறையையாகும்.
E – மேற்குறித்த A, B, C ஆகியன தொடர்பான அரசாட்சி முறையையாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**2.** அரசியல் என்பது:
A – அரசாங்கத்தினதும் அரசினதும் செயற்பாடுகளோடு இணைந்த செயன்முறை பற்றிய கலையாகும்.
B – நல்லவை, தீயவைகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் கற்றலோடு இணைந்த பொதுச் செயற்பாடாகும்.
C – சமரசம் மற்றும் பேச்சுவார்த்தையினூடாக மோதல்களைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு வழிமுறையாகும்.
D – பொது வளங்களின் பயன்பாடு மற்றும் பங்கீட்டோடு தொடர்பான செயன்முறையாகும்.
E – எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எவ்வழிமுறையினூடாகவேனும் அடையும் அதிகாரப் போராட்டமாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**3.** நடத்தை வாதமானது:
A – 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் நவ மாக்சியவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கல்விசார் இயக்கமாகும்.
B – தனியாட்களினதும் குழுக்களினதும் அரசியல் நடத்தையை அவதானித்தல், பகுத்தாய்தல் என்பன பற்றிய கற்கைகளில் கவனம் செலுத்துகிறது.
C – கற்கைகளை மேற்கொள்வதற்கு முறைமையானதும் துல்லியமானதுமான முறைகளைப் பயன்படுத்துகிறது.
D – மக்களின் அரசியல் நடத்தைப் பாங்குகளின் இருப்பினை நிலைநிறுத்த முயல்கிறது.
E – மக்களின் அரசியல் நடத்தைப் பாங்குகளோடு தொடர்பான நியதிகளை உருவாக்க முயல்கிறது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**4.** அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பதற்கான சமூகவியல் அணுகுமுறையின் மூலம் கவனம் செலுத்தும் கற்கைப் பகுதிகளாவன:
A – அரசியலுக்கும் சமூகத்துக்குமுள்ள தொடர்பாகும்.
B – அரசியல் மற்றும் சமூக நிறுவனங்களுக்குள்ள தொடர்பாகும்.
C – அரசுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமுள்ள தொடர்பாகும்.
D – அதிகாரம், ஆணையதிகாரம் மற்றும் சட்டமுறைத் தன்மை என்பவற்றுக்கிடையிலான தொடர்பாகும்.
E – சமூக நடத்தைக்கும் அரசியல் நடத்தைக்குமுள்ள தொடர்பாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 2 ஐப் பார்க்க

5. தேசிய அரசின் பிரதான பண்புகளாவன:
A – சட்டமுறையின் அடிப்படையில் ஆணையதிகாரத்தைப் பயன்படுத்தி கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள திறன்
B – உயரியதும் தனிமுதன்மையானதுமான அதிகாரத்தின் தனியுரிமை உரித்து
C – அன்றாட வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பயன்படுத்தும் நிர்வாக இயந்திரம்
D – ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைப் புரிவதற்குத் தாராள ஜனநாயக அரசாங்க முறையை மட்டும் பயன்படுத்துதல்
E – சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பையும் நடைமுறைப்படுத்துவதற்குப் பொலீசையும் ஆயுதப்படைகளையும் கொண்டு நடத்துதல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

6. அரசாங்கமானது:
A – சட்டத்தையும் ஒழுங்கையும் தேசிய மட்டத்தில் பிரயோகிப்பதற்குள்ள முறைசார் நிறுவனப் பொறிமுறையாகும்.
B – அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைவுகளின் தொகுதியைக் கொண்டுள்ளது.
C – கூட்டுத் தீர்மானங்களை எடுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாகச் சமூகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பிரயோகிக்கும் நிறுவனமாகும்.
D – பிறப்பிக்கப்பட்டுள்ள விதிகளை நடைமுறைப்படுத்தும் தேவை எங்கு, எப்போது ஏற்படுகிறதோ அங்கு இருப்பிலிருக்கும்.
E – சமூக நன்மையின் மேம்பாட்டுக்கு அத்தியாவசியமானதென அராஜகவாதிகளும் கருதுகின்றனர்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

7. முதலாளித்துவப் பொருளாதார முறைமையின் பிரதான பண்புகளாவன:
A – சந்தைகளை இலக்காகக் கொண்டு பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்
B – உற்பத்தி மூலதனமானது முழுமையாகத் தனியாரிடமே இருத்தல்
C – பொருளாதார வாழ்வு கேள்வி, நிரம்பல் என்ற பொதுமுறையான சந்தைச் சக்திகளுக்கேற்ப ஒழுங்கமைந்திருத்தல்
D – பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு முழுமையாக இல்லாதிருத்தல்
E – சடம்சார் நலனும் இலாப உச்சமும் முயற்சியாண்மையினதும் கடும் உழைப்பினதும் பிரதான உந்து சக்திகளாக இருத்தல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

8. குறைந்தபட்ச அரசின் பிரதான பண்புகளாவன:
A – தனிப்பட்ட பிரசைகள் தாம் சிறந்ததெனக் கருதும் சுய வாழ்வைக் கொண்டு நடத்தக் கூடியதான அமைதி மற்றும் சமூக ஒழுங்குச் சூழலைக் கொண்டு நடத்துதல்
B – தனியார் சொத்துரிமையினால் ஏற்படும் சமூக அநீதியை ஒழிப்பதற்குச் செயற்படுதல்
C – பொருளாதார மற்றும் சமூக விடயங்களை முழுமையாகத் தனிப்பட்டவர்களின் அல்லது தனியார் தொழில்களிடம் விட்டுவிடுதல்
D – அரசின் வகிபங்கினை இரவுக் காவலாளி நிலைக்குக் குறுகியதாக்குதல்
E – மக்களை உள்ளக ஒழுங்கீனம் மற்றும் வெளியகத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்தல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

9. சமதர்மவாதத்தின் பிரதான பண்புகளாவன:
A – முதலாளித்துவத்துக்கு எதிரான ஒரு கருத்தியலாக இருத்தல்
B – முதலாளித்துவத்தின் பிரச்சினைகளுக்குப் பரிவும் சமூகப் பயனும் மிக்க மாற்றீட்டை வழங்குதல்
C – போட்டியை விட ஒத்துழைப்புக்கு முதலிடமளித்தல்
D – தனிமனிதவாதத்துக்குப் பதிலாக கூட்டாண்மைவாதத்தை ஆதரித்தல்
E – வரையறுக்கப்பட்ட திறந்த சந்தை முறைமையின் இருப்பை அங்கீகரித்தல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

10. கால்மாக்ஸ் கருதிய கொமியூனிச சமூகம்:
A – புரட்சிகர பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் கீழான மாற்றமுறும் சோஷலிசக் கட்டத்துக்குப் பின்னர் தாபிக்கப்படும்.
B – சந்தைகளை இலக்காகக் கொண்டு பொருளுற்பத்தியை மேற்கொள்ளும்.
C – பொது உரித்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
D – வர்க்கமற்ற ஒரு சமூகமாக இருக்கும்.
E – அரசற்ற ஒரு சமூகமாக இருக்கும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 3 ஐப் பார்க்க

**11.** இறைமை என்பது:

A – தனிமுதன்மையானதும் எல்லையற்றதுமான அதிகாரம் பற்றிய மூலக் கொள்கையாகும்.
B – பலவந்த அதிகாரத் தனியுரிமையை அரசுக்கு வழங்குகிறது.
C – நீதித்துறை மற்றும் நிறைவேற்றுத் துறைகளினூடாக அரசினால் பிரயோகிக்கப்படுகின்றது.
D – அரசை ஏனைய சகல அரசியல் மற்றும் சமூகத் தாபனங்களை விட மேலாக வைக்கின்றது.
E – உள்ளக மற்றும் வெளியக இறைமை என்ற இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**12.** அதிகார வேறாக்கம் என்பது:

A – அரசாங்கத்தின் மூன்று பிரதான பணிகளும் ஒன்றிலிருந்து மற்றையவை பிரிந்திருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் கோட்பாடாகும்.
B – ஜனநாயக ஆட்சிக்கும் மக்களின் சுதந்திரத்தின் பாதுகாப்புக்கும் இன்றியமையாத மூலக்கொள்கையாகக் கருதப்படுகிறது.
C – "ஒருவரின் கையில் அதிகாரம் குவிந்திருப்பின் கொடுங்கோன்மைக்கு வழிவகுக்கும்" என்ற கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
D – சமஷ்டி அரசாங்கங்களில் மத்திக்கும் சமஷ்டி அலகுகளுக்குமிடையில் அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்குப் பயன்படுத்தும் ஒரு கோட்பாடாகும்.
E – 1789 அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கத்தின்போது பயன்படுத்தப்பட்ட ஒரு முக்கியமான கோட்பாடாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**13.** மக்கள் சட்டத்துக்கு அடிப்பணியக் காரணம்:

A – அது சட்டமுறையானதாக இருப்பதனாலாகும்.
B – அடிபணியாமையால் ஏற்படும் விளைவுகளை ஏற்க விரும்பாமையினாலாகும்.
C – ஒரு சிறந்த சமூகத்தின் இருப்புக்குச் சட்டம் அவசியமாகின்றது என்ற நம்பிக்கையினாலாகும்.
D – சட்டம் சகலருக்கும் சமமானது என்ற பொது ஒப்புதலினாலாகும்.
E – பதவியிலுள்ள அரசாங்கத்தை ஆதரிப்பதற்குள்ள விருப்பினாலாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**14.** பாராளுமன்ற அரசாங்க முறையின் இன்றியமையாத மூலக்கொள்கைகளாவன:

A – தேர்தலில் நிர்ணயிக்கப்படும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பலத்தின் அடிப்படையில் அமைக்கப்படுதல்.
B – அரசாங்கம் பாராளுமன்றின் நம்பிக்கையில் தங்கியிருப்பதனால் பாராளுமன்றுக்குப் பொறுப்புக்கூறும் அரசாங்கமாக இருத்தல்.
C – பொதுவாகப் பாராளுமன்றில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சியின் உறுப்பினர்களிலிருந்து நிறைவேற்றுத்துறை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுதல்.
D – நிறைவேற்றுத்துறை கூட்டுத்தன்மையுடையதாக இருத்தல்.
E – அரசாங்கத்தின் தலைவரான பிரதம மந்திரி அரசின் தலைவர் மற்றும் ஆயுதப்படைகளின் தளபதி ஆகிய பதவிகளை வகித்தல்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**15.** ஜனாதிபதி அரசாங்க முறையின் அடிப்படை மூலக்கொள்கைகளாவன:

A – நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் இரு வேறுபட்ட தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்படுதல்.
B – யாப்பின் மூலம் நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டத்துறைகளுக்கு ஒன்றிலிருந்து இன்னொன்று சுயாதீனமான இரு அதிகாரப் பரப்புகள் ஒப்படைக்கப்படுதல்.
C – யாப்பின் மூலம் நிறைவேற்று ஆணையதிகாரம் ஜனாதிபதியிடம் குவிந்திருத்தல்.
D – அரசு மற்றும் அரசாங்கத் தலைவர் என்ற இரு பதவிகளும் ஜனாதிபதிப் பதவியில் ஒன்றுகுவிக்கப்பட்டிருத்தல்.
E – ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்குச் சட்டத்துறை திறன் பெற்றிருத்தல்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **16** தொடக்கம் **21** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று பிழையானதாகும். **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

**16.** அனைத்தாண்மை (Totalitarian) அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன:

(1) ஓர் உத்தியோகபூர்வக் கருத்தியல் காணப்படுதல்
(2) அரசக் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்ட பொருளாதார வாழ்வு
(3) ஒரு தனிக்கட்சி மட்டும் நிலவுதல்
(4) வெகுஜன ஊடகங்களில் அரசத் தனியுரிமை நிலவுதல்
(5) அச்சுறுத்தும் கட்டுப்பாட்டுப் பொறிமுறை ஒன்றைக் கொண்டிருத்தல்

[பக். 4 ஐப் பார்க்க

**17.** அரசியலமைப்பு என்பது:
(1) ஒரு நாட்டின் அரசியல் முறைமையின் செயற்பாட்டோடு தொடர்பான விதிகளின் தொகுதியைக் கொண்ட ஓர் ஆவணமாகும்.
(2) ஓர் அரசியல் முறைமையிலுள்ள பிரசைகளின் சமூக நடத்தையோடு தொடர்பான விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் குறிக்கும் ஓர் ஆவணமாகும்.
(3) ஜனநாயக ரீதியானதும் சட்டமுறையானதுமான ஆட்சிக்கு இன்றியமையாதது எனக் கருதப்படுகிறது.
(4) எழுதப்பட்ட–எழுதப்படாத, சமஷ்டி–ஒற்றையாட்சி, நெகிழும்–நெகிழாத யாப்புக்கள் எனப் பாகுபடுத்தப்படுகிறது.
(5) மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறந்த கருவியாகக் கருதப்படுகிறது.

**18.** அரசியல் கலாசாரம் என்பது:
(1) அரசியல் பகுப்பாய்வினில் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய கருவியாகும்.
(2) இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் அமெரிக்க அரசறிவியலாளர்களால் பிரபல்யப்படுத்தப்பட்டது.
(3) அரசியல் முறைமையின் மீது மக்கள் வெளியிடும் நம்பிக்கைகள், மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும்.
(4) இன்று உலகில் நிகழும் அரசியல் நிகழ்வுகளைக் குறிக்கிறது.
(5) வேறுபட்ட அரசியல் முறைமைகளை ஒப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஓர் எண்ணக்கருவாகும்.

**19.** அரசியல் கட்சிகளானவை:
(1) அதிகாரத்தைப் பெறுவதன் மூலம் அரசாங்க அதிகாரத்தைப் பிரயோகிப்பதனை இலக்காகக் கொண்டு ஒழுங்கமைந்த அமைப்புகளாகும்.
(2) முறையான அரசியல், பொருளாதார, சமூகக் கருத்தியலைக் கொண்டு ஒழுங்கமைந்த அமைப்புகளாகும்.
(3) அரசையும் சிவில் சமூகத்தையும் இணைக்கும் ஒரு முக்கிய இணைகரமாகும்.
(4) சமூகத்தில் சமூக மற்றும் சமயக் கருத்து முரண்பாடுகளை உருவாக்கும் மூலாதாரங்களாகும்.
(5) ஒன்றிலிருந்து மற்றையதைப் பிரிக்க முடியாதளவுக்கு ஜனநாயகத்துடன் மிக நெருங்கியவையாகும்.

**20.** உள்ளூராட்சி மன்றம் என்பது:
(1) ஒரு குறிப்பிட்ட உள்ளூர் வட்டாரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் அரசாங்கமாகும்.
(2) இறைமையில் உரித்துப் பெறாத ஓர் அரசாங்கமாகும்.
(3) அரசியலமைப்பினால் முழுமையாக உறுதிப்படுத்தப்பட்ட சுய இருப்பினைக் கொண்ட ஓர் அரசாங்கமாகும்.
(4) மத்திய அதிகாரத்தினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் பணிகளையும் பிரயோகிக்கும் ஓர் அரசாங்கமாகும்.
(5) மத்திய அதிகாரத்துக்கு முழுமையாகக் கீழ்ப்பட்ட ஓர் அரசாங்கமாகும்.

**21.** குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளின் அரசாங்கங்களின் சில சிறப்புப் பண்புகளாவன:
(1) எழுதப்படாத யாப்பினைக் கொண்ட பிரித்தானிய அரசாங்க முறையில் வழக்காறுகளும் மரபுகளும் பிரதான வகிபங்கினை வகிக்கின்றன.
(2) அரசாங்கத்தில் நிறைவேற்றுத்துறையின் தன்முனைப்பாட்சியைத் தடுக்கும் வலு வேறாக்கமும் தடைகள் சமன்பாட்டு முறையும் அமெரிக்க அரசியலமைப்பின் முதன்மையான மூலக் கொள்கைகளாகும்.
(3) சுவிட்சர்லாந்தின் சமஷ்டி முறையின் மத்திய அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறை 'கூட்டு நிறைவேற்றுத்துறை' என்றழைக்கப்படுவதுடன் அதன் உறுப்பினர்கள் சமஷ்டிப் பேரவையினால் நியமிக்கப்படுகின்றனர்.
(4) 1958 இல் பிரான்சில் தாபிக்கப்பட்ட ஐந்தாம் குடியரசு ஒரு கலப்பு நிறைவேற்று முறையினதாக இருப்பதோடு அதன் நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியாலும் பிரதம மந்திரியாலும் அதிகாரப் பகிர்வு முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.
(5) இந்திய அரசாங்க முறை அரைகுறை சமஷ்டி முறையாக இருப்பதுடன் அது தாம் விரும்பும் எச்சந்தர்ப்பத்திலும் சமஷ்டி முறையிலிருந்து பிரிந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இருபத்தெட்டு மாநிலங்களைக் கொண்டுள்ளது.

● **22** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் பிழையானவையாகும். **பிழையான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**22.** குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளின் சட்டத்துறைகளின் சிறப்புப் பண்புகளாவன:
A – பிரித்தானிய அரசாங்க முறையில் பாராளுமன்றம் என அழைக்கப்படும் சட்டத்துறை சட்டவாக்கத்தில் ஒத்த அதிகாரங்களைப் பெற்ற இரு மன்றுகளைக் கொண்டுள்ளது.
B – காங்கிரஸ் என்றழைக்கப்படும் அமெரிக்கச் சட்டத்துறை இரு மன்ற முறையினதாக இருப்பதோடு அவற்றுள் முதல் மன்றமான மக்கள் பிரதிநிதிகள் சபையை விட இரண்டாம் மன்றமான செனெற் சபை அதிக பலம் வாய்ந்ததாகும்.
C – சமஷ்டிப் பேரவை என்றழைக்கப்படும் சுவிட்சர்லாந்துச் சட்டத்துறை இருமன்ற முறையினதாக இருப்பதோடு அவ்விரு மன்றுகளினதும் உறுப்பினர்கள் ஐந்து வருடப் பதவிக்காலத்துக்கு மக்களாலும் கன்ரன்களாலும் தெரிவுசெய்யப்படுகின்றனர்.
D – தற்போதைய பிரான்சிய அரசாங்க முறையில் பாராளுமன்றம் என்றழைக்கப்படும் சட்டத்துறை இருமன்ற முறையினதாக இருப்பதோடு அவை இரண்டும் தன்னிச்சையான முறையில் ஜனாதிபதியினால் எச்சந்தர்ப்பத்திலும் கலைக்கப்படலாம்.
E – இந்திய மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறை இருமன்ற முறையினதாக இருப்பதோடு அவற்றுள் இரண்டாம் மன்றமான ராஜ்ய சபை அதிகாரங்களிலும் பணிகளிலும் பெரும்பாலும் பெரிய பிரித்தானிய பிரபுக்கள் சபையை ஒத்ததாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 5 ஐப் பார்க்க

**23.** சர்வதேச அரசியல் என்பது:
A – சுதந்திர இறைமை மிக்க தேசிய அரசுகளுக்கு மத்தியிலான அரசியலாகும்.
B – சர்வதேசச் சமூகத்தில் தனிப்பட்டவர்களின் குழுக்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
C – சர்வதேச அரசு சார் நிறுவனங்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
D – சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
E – பல்தேசக் கூட்டுத்தாபனங்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**24.** பொதுக் கொள்கை என்பது:
A – ஒரு தனியாளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
B – தனியாட்களின் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
C – ஒரு வர்த்தக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
D – ஒரு குடும்பத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
E – ஓர் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**25.** சமூக முரண்பாடு என்பது:
A – தனிநபர் ஒருவருக்குள் ஏற்படும் முரண்பாடாகும்.
B – இரண்டு தனியாட்களுக்கிடையிலான முரண்பாடாகும்.
C – இரு நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடாகும்.
D – இரு சமூகக் குழுக்களுக்கிடையிலான முரண்பாடாகும்.
E – இரு நாடுகளுக்கிடையிலான முரண்பாடாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**26.** இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களாவன:
A – கோல்புருக்-கமரன்
B – மனிங்
C – மனிங்-டெவன்ஷியர்
D – டொனமூர்
E – சோல்பரி.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**27.** இலங்கையில் சட்டமன்றுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு முதன்முதலாக வாக்குரிமை அறிமுகப் படுத்தப்பட்டது:
A – 1833 கோல்புருக்-கமரன் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
B – 1911 குரு-மக்கலம் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
C – 1924 மனிங்-டெவன்ஷியர் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
D – 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
E – 1948 சோல்பரி சீர்திருத்தத்தின் மூலமாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**28.** 1924 மனிங்-டெவன்ஷியர் அரசாங்கம் தோல்வியுறுவதில் பங்காற்றிய பிரதான காரணிகளாவன:
A – இனவாரிப் பிரதிநிதித்துவம்
B – சட்டமன்றின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை
C – உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு அறிமுகம் செய்யப்பட்ட தெரிவு முறைக் கொள்கை
D – பொறுப்பிலிருந்து அதிகாரங்கள் பிரிக்கப்பட்டமை
E – நிதிக் குழுவின் நிலை பலப்படுத்தப்பட்டமை
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**29.** இலங்கைத் தேசிய இயக்கம்:
A – பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியிலிருந்து பூரண சுதந்திரம் பெறுவதற்குப் பலமான முறையில் கூக்குரலிட்டது.
B – தேசிய ஒருமைப்பாட்டின் மேம்பாட்டில் அதிக அக்கறை செலுத்தியது.
C – மேற்கத்திய மயமாகிய சமூக உயர் குழாம் வகுப்பினரால் ஆரம்பிக்கப்பட்டுத் தலைமை தாங்கப்பட்ட ஓர் அமைதியான இயக்கமாக இருந்தது.
D – சமூகத்திலிருந்த சகல சமூக, இனக் குழுக்களின் பங்கேற்பினைப் பெற்ற ஒரு மக்கள் இயக்கமாக இருந்தது.
E – அதிகமாக இந்திய தேசிய இயக்கத்தினை ஒத்திருந்தது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 6 ஐப் பார்க்க

**23.** சர்வதேச அரசியல் என்பது:
A – சுதந்திர இறைமை மிக்க தேசிய அரசுகளுக்கு மத்தியிலான அரசியலாகும்.
B – சர்வதேசச் சமூகத்தில் தனிப்பட்டவர்களின் குழுக்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
C – சர்வதேச அரசு சார் நிறுவனங்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
D – சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
E – பல்தேசக் கூட்டுத்தாபனங்களுக்கு மத்தியிலான அரசியலாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**24.** பொதுக் கொள்கை என்பது:
A – ஒரு தனியாளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
B – தனியாட்களின் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
C – ஒரு வர்த்தக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
D – ஒரு குடும்பத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
E – ஓர் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**25.** சமூக முரண்பாடு என்பது:
A – தனிநபர் ஒருவருக்குள் ஏற்படும் முரண்பாடாகும்.
B – இரண்டு தனியாட்களுக்கிடையிலான முரண்பாடாகும்.
C – இரு நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடாகும்.
D – இரு சமூகக் குழுக்களுக்கிடையிலான முரண்பாடாகும்.
E – இரு நாடுகளுக்கிடையிலான முரண்பாடாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**26.** இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களாவன:
A – கோல்புரூக்-கமரன்
B – மனிங்
C – மனிங்-டெவன்ஷியர்
D – டொனமூர்
E – சோல்பரி
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**27.** இலங்கையில் சட்டமன்றுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு முதன்முதலாக வாக்குரிமை அறிமுகப் படுத்தப்பட்டது:
A – 1833 கோல்புரூக்-கமரன் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
B – 1911 குரு-மக்கலம் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
C – 1924 மனிங்-டெவன்ஷியர் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
D – 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலமாகும்.
E – 1948 சோல்பரி சீர்திருத்தத்தின் மூலமாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**28.** 1924 மனிங்-டெவன்ஷியர் அரசாங்கம் தோல்வியுறுவதில் பங்காற்றிய பிரதான காரணிகளாவன:
A – இனவாரிப் பிரதிநிதித்துவம்
B – சட்டமன்றின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை
C – உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு அறிமுகம் செய்யப்பட்ட தெரிவு முறைக் கொள்கை
D – பொறுப்பிலிருந்து அதிகாரங்கள் பிரிக்கப்பட்டமை
E – நிதிக் குழுவின் நிலை பலப்படுத்தப்பட்டமை
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**29.** இலங்கைத் தேசிய இயக்கம்:
A – பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியிலிருந்து பூரண சுதந்திரம் பெறுவதற்குப் பலமான முறையில் கூக்குரலிட்டது.
B – தேசிய ஒருமைப்பாட்டின் மேம்பாட்டில் அதிக அக்கறை செலுத்தியது.
C – மேற்கத்திய மயமாகிய சமூக உயர் குழாம் வகுப்பினரால் ஆரம்பிக்கப்பட்டுத் தலைமை தாங்கப்பட்ட ஓர் அமைதியான இயக்கமாக இருந்தது.
D – சமூகத்திலிருந்த சகல சமூக, இனக் குழுக்களின் பங்கேற்பினைப் பெற்ற ஒரு மக்கள் இயக்கமாக இருந்தது.
E – அதிகமாக இந்திய தேசிய இயக்கத்தினை ஒத்திருந்தது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 6 ஐப் பார்க்க

**30.** இலங்கை இடதுசாரி இயக்கம்:

A – பெருந்தோட்டத் தொழிலிலிருந்து உருவாகிய புதிய முதலாளி வர்க்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது.
B – அதிகமாக கற்பனா சோசலிசவாதிகளின் அரசியல் கருத்துகளால் செல்வாக்குக்குட்பட்ட இயக்கமாக இருந்தது.
C – இலங்கையில் சமூக ஜனநாயக அரசாங்கத்தைத் தாபிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது.
D – மேற்கத்திய கல்வியைப் பெற்ற இளம் மாக்சீயத் தீவிரவாதக் குழுவின் தலைமையின் கீழ் தாபிக்கப்பட்ட ஓர் இயக்கமாக இருந்தது.
E – சுதந்திரத்தைப் பெறுவதற்கு இலங்கைத் தேசிய காங்கிரசுடன் நெருங்கிய வகையில் ஒத்துழைத்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **31** தொடக்கம் **41** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**31.** இலங்கைக்குப் பொறுப்பாட்சியை சிபார்சு செய்யாமல் இருப்பதற்கு டொனமூர் ஆணைக்குழுவின் மீது செல்வாக்குச் செலுத்திய காரணிகளாவன:

A – சுதேச அரசியல்வாதிகளின் அரசியல் முதிர்ச்சியற்ற தன்மை
B – மக்கள் மத்தியில் கூட்டுணர்வும் ஐக்கியமும் நிலவாமை
C – சாதாரண மக்களின் அரசியல் பங்கேற்பு கீழ்மட்டத்தில் நிலவியமை
D – பொறுப்பாட்சிக்கு எதிராகப் பறங்கிய, இனத்தவர்கள் காட்டிய பலத்த எதிர்ப்பு
E – ஒழுங்கமைந்த அரசியல் கட்சி முறை நிலவாமை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**32.** டொனமூர் அரசாங்கத்தின் கீழிருந்த தேசாதிபதி:

A – பிரித்தானிய முடியினதும் அரசாங்கத்தினதும் பிரதிநிதியாக இருந்தார்.
B – மந்திரிமார் சபையின் தலைவராக இருந்தார்.
C – அரசாங்கத்தின் பிரதான நிறைவேற்றாளராக இருந்தார்.
D – காலனித்துவ நாட்டின் ஏகாதிபத்தியத்தின் நலன்களின் பிரதம பாதுகாவலராக இருந்தார்.
E – சகல மசோதாக்களுக்கும் இறுதி அனுமதி வழங்கும் தனி அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**33.** 1948 சோல்பரி அரசியலமைப்பின் பிரதான பண்புகளாவன:

A – மகா தேசாதிபதியையும் மந்திரி சபை அமைச்சர்களையும் கொண்ட நிறைவேற்று அரசாங்கமாக இருந்தமை
B – மகா தேசாதிபதியையும் செனெற் சபை மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சபை என்றழைக்கப்படும் இரு மன்றுகளையும் கொண்ட சட்டத்துறை
C – மகா தேசாதிபதி சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறல்
D – பகிரங்க சேவையின் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கு ஒரு பகிரங்க சேவை ஆணைக்குழு இருந்தமை
E – உயர் நீதிமன்றின் தலைமையின் கீழிருந்த சுதந்திரமான நீதித்துறை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**34.** 1948 சோல்பரி அரசியலமைப்பின் கீழிருந்த அரசியல் நிர்வாகம்:

A – மந்திரி சபை என்றழைக்கப்பட்டது.
B – மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களிலிருந்து மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டது.
C – பிரதமர் என்றழைக்கப்படும் ஓர் அமைச்சரினால் தலைமை தாங்கப்பட்டது.
D – பாராளுமன்றுக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூற வேண்டியிருந்தது.
E – ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் சட்டத்துறையால் நீக்கப்பட முடிந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**35.** சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சோல்பரி யாப்பில் வழங்கப்பட்டிருந்த விசேட காப்பீடுகள் ஆவன:

A – அடிப்படை உரிமைகள் பற்றிய ஓர் அத்தியாயம்
B – யாப்பின் 29 (2) ஆம் உறுப்புரை
C – செனெற் மன்றம்
D – பல உறுப்பினர் தேர்தல் தொகுதிகளும் மகா தேசாதிபதியால் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களும்
E – சுதந்திரமான நீதித்துறையும் பகிரங்க சேவையும்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 7 ஐப் பார்க்க

**36.** 1972 முதலாம் குடியரசு யாப்பின் பிரதான பண்புகளாவன:
A – வெஸ்ட் மின்ஸ்டர் மாதிரியிலிருந்து முழுமையாக விடுபட்டமை
B – இலங்கையை அரசியல் ரீதியாக சுதந்திரமானதும் இறைமையானதுமான குடியரசாக்கியமை
C – பாராளுமன்ற ஜனநாயகத்தினூடாக இலங்கையை சமூக ஜனநாயக அரசாக ஆக்குவதை இலக்காகக் கொண்டமை
D – நீதித்துறையினதும் பகிரங்க சேவையினதும் சுதந்திரத்தை மதிப்பிறக்கியமை
E – இலங்கை அரசின் சமயச் சார்பற்ற தன்மையை மாற்றியமை
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**37.** 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறை:
A – ஒரு மன்ற முறையினதாக இருந்ததோடு தேசிய அரசுப் பேரவை என்று அழைக்கப்பட்டது.
B – மக்களின் சட்டவாக்க, நிறைவேற்று, நீதி அதிகாரங்களைப் பிரயோகித்தது.
C – மக்கள் இறைமையைப் பிரயோகிப்பதில் சட்டரீதியான வரையறைகளையுடையதன்று.
D – யாப்பினைத் திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு மீயுயர் சட்டவாக்க அதிகாரத்தைப் பெற்றிருந்தது.
E – மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 225 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**38.** 1978 இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு:
A – இலங்கையின் 'கோலிஸ்ட் யாப்பு' என்றழைக்கப்படுகின்றது.
B – நிறைவேற்றுத்துறையின் சுதந்திரத்தைப் பலமாக வலியுறுத்துகின்றது.
C – விமர்சனங்களின்படி யாப்புறு எதேச்சாதிகாரம் உருவாகுவதற்குப் பொறுப்பாகவுள்ளது.
D – பிரதமர் பதவியைக் குறிப்பிடத்தக்களவுக்கு மதிப்பிறக்கம் செய்துள்ளது.
E – நாட்டில் நல்லாட்சியை பலப்படுத்துவதற்கு அதிகளவு பங்காற்றியுள்ளது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**39.** 1978 யாப்பின் கீழுள்ள ஜனாதிபதி:
A – ஆறு வருடப் பதவிக் காலத்துக்கு மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுகிறார்.
B – மக்களின் நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிக்கும் மீயுயர் கருவியாவார்.
C – நிறைவேற்றுப் பணிகளைப் புரிவதில் பாராளுமன்றுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்படாதவராவார்.
D – 18ஆம் யாப்புத் திருத்தத்தின்படி எத்தனை தடவைகளும் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.
E – பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் ஒரு குற்றப்பிரேரணையின் மூலம் பதவி நீக்கம் செய்யப்படுவார்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**40.** 1978 யாப்பின் கீழுள்ள சட்டத்துறை:
A – ஒரு மன்ற முறையினதாக இருப்பதோடு அது பாராளுமன்றம் என்றழைக்கப்படுகிறது.
B – மக்களின் சட்டவாக்க அதிகாரத்தைப் பிரயோகிக்கும் மீயுயர் கருவியாகும்.
C – பொது நிதியின் மீயுயர் காப்பாளராகும்.
D – சில யாப்புறு நிபந்தனைகளுக்குட்பட்டு ஜனாதிபதியால் கலைக்கப்படும்.
E – மக்களால் தெரிவுசெய்யப்படும் 196 உறுப்பினர்களையும் தேசியப் பட்டியலிலிருந்து நியமிக்கப்படும் 29 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**41.** 1978 யாப்பின் 105ஆம் உறுப்புரையின்படி இலங்கை நீதிமன்ற முறைமையில் இடம்பெறும் நீதிமன்றங்களாவன:
A – உயர் நீதிமன்றம்
B – மேன்முறையீட்டு நீதிமன்றம்
C – மேல் நீதிமன்றம்
D – காதி நீதிமன்றங்கள்
E – பாராளுமன்றம் காலத்துக்குக்காலம் ஆணையிட்டுத் தாபிக்கும் வேறும் முதனிலை நீதிமன்றங்கள்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **42** தொடக்கம் **46** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று சரியானதாகும். **சரியான** கூற்றைத் தெரிவுசெய்க.

**42.** 1978 யாப்பின்படி பிரதம மந்திரியாக நியமிக்கப்படுபவர்:
(1) பாராளுமன்றிலுள்ள அரசாங்கக் கட்சியின் அதிமூத்த உறுப்பினர் ஆவார்.
(2) பாராளுமன்றில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சியின் தலைவர் ஆவார்.
(3) பாராளுமன்றின் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெறக்கூடியவர் என ஜனாதிபதி கருதும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்.
(4) பாராளுமன்றிலுள்ள பெரும்பான்மைக் கட்சி சிபார்சு செய்யும் ஓர் உறுப்பினர் ஆவார்.
(5) பாராளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் ஏகமனதாகச் சிபார்சு செய்யும் ஓர் உறுப்பினர் ஆவார்.

[பக். 8 ஐப் பார்க்க

**43.** 1978 யாப்பின்படி ஜனாதிபதிப் பதவி வறிதாகி ஒரு வாரிசாளர் தெரிவு செய்யப்படும் வரையிலான இடைக்காலப் பகுதிக்கு ஜனாதிபதியாகப் பணியாற்றுபவர்:
(1) பிரதம மந்திரி
(2) சபாநாயகர்
(3) பிரதம நீதியரசர்
(4) சபை முதல்வர்
(5) ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியான, பாராளுமன்றினால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்

**44.** 1978 யாப்பின்படி பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் ஒரு மசோதா சட்டமாவதற்கு அதனை உறுதிப்படுத்த வேண்டியவர்:
(1) ஜனாதிபதி
(2) பிரதம மந்திரி
(3) சபாநாயகர்
(4) சபை முதல்வர்
(5) சட்டமா அதிபர்

**45.** இலங்கையின் தற்போதைய உள்ளூராட்சி மன்ற முறைமையில் இடம்பெறும் மன்றுகளாவன:
(1) மாகாண சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்பனவாகும்.
(2) மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்பனவாகும்.
(3) மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் மற்றும் கிராம சபைகள் என்பனவாகும்.
(4) மாகாண சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் மற்றும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்பனவாகும்.
(5) மாகாண சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மற்றும் கிராம சபைகள் என்பனவாகும்.

**46.** இலங்கையின் அரசியல் கட்சி முறை:
(1) இரு கட்சி முறையினதாகும்.
(2) இரு பிரதான கட்சிகளை முதன்மைப்படுத்திய பல கட்சி முறையினதாகும்.
(3) சமமான முறையில் பலம் வாய்ந்த பல கட்சிகளைக் கொண்ட பல கட்சி முறையினதாகும்.
(4) பிரதானமாகக் காடர் கட்சிகளைக் கொண்ட பல கட்சி முறையினதாகும்.
(5) ஒரு கட்சியின் ஆதிக்கத்தையுடைய பலகட்சி முறையினதாகும்.

● **47** தொடக்கம் **50** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** பிழையானதாகும். **பிழையான** கூற்றினைத் தெரிவுசெய்க.

**47.** சர்வதேச நீதிமன்றம்:
(1) நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ளது.
(2) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பிரதான நீதிமன்ற அங்கமாகும்.
(3) அரசுகளுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கும் ஐக்கிய நாடுகள் தாபனம் மற்றும் அதன் சிறப்பு முகவராண்மை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
(4) தனிப்பட்டவர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றின் சட்டரீதியான பிணக்குகளைக் கையாளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
(5) பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபைகளால் ஒன்பது வருட பதவிக் காலத்துக்கு நியமிக்கப்படும் ஒன்பது நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

**48.** பொதுநலவாய அமைப்பு:
(1) ஐக்கிய நாடுகள் தாபனத்தோடு இணைந்த ஒரு நிறுவனமாகும்.
(2) இறைமை மிக்க அரசுகளுக்கு மட்டும் உறுப்புரிமை திறந்துவிடப்பட்ட ஒரு தன்னார்வ நிறுவனமாகும்.
(3) பிரித்தானிய மகாராணியால் தலைமை தாங்கப்படுகிறது.
(4) பிரதானமாக கல்வி, சுகாதாரம், நல்லாட்சி, நியாயமான சட்ட முறைமை, மனித உரிமைகள் ஆகிய பரப்புகளில் உறுப்பரசுகளுக்கு மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
(5) உலகில் ஒரு சாசனத்தையோ யாப்பையோ கொண்டிராத ஒரே அரச சார்பு நிறுவனமாகும்.

**49.** பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியச் சங்கம்:
(1) பொதுவாக சர்வதேசப் பரப்பில் சார்க் என்றழைக்கப்படுகிறது.
(2) முதலில் 1985 டிசம்பர் 08 இல் ஏழு தென்னாசிய நாடுகளால் தாபிக்கப்பட்டது.
(3) பொருளாதாரம், சமூகம், கலாசாரம், தொழில் நுட்பம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது.
(4) உயர் தீர்மானம் எடுக்கும் அமைப்பான உச்சி மாநாட்டினை வருடாந்தம் நடத்துகிறது.
(5) பெரும்பான்மை வாக்குகளினால் தீர்மானங்களை எடுக்கின்றது.

**50.** அணிசேரா இயக்கம்:
(1) 1961 இல் அணிசேரா நாடுகளின் அரசத் தலைவர்களின் பெல்கிரேட் மாநாட்டின்போது தாபிக்கப்பட்டது.
(2) உத்தியோக ரீதியாக எந்த அதிகார முகாமுடனும் அணிசேராத அரசுகளின் ஒரு குழுவாகும்.
(3) ஏனையோரின் ஆள்புல ஒருமை, ஆக்கிரமிப்பின்மை, உள்ளக விவகாரங்களில் தலையிடாமை, சமத்துவம், சமாதான சகவாழ்வு ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் மூலக்கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகிறது.
(4) அணிசேரா நாடுகளின் அரசத் தலைவர்களின் உயர் நிறுவனமான உச்சி மாநாட்டின் நிறுவனப் பொறிமுறையினூடாகச் செயற்படுகிறது.
(5) நிராயுதப் போரின் பின்னர் படிப்படியாக அழிவுற்றது.

* * *

AL/2014/23/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

அධ்‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | |
|---|---|---|
| දේශපාලන විද්‍යාව II<br>அரசியல் விஞ்ஞானம் II<br>Political Science II | 23 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

சுட்டெண்: ....................................

| | |
|---|---|
| பகுதி A | |
| மொத்தப் புள்ளிகள் | 20 |

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாப்பத்திரம் **A, B, C** என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **A** ஆனது **20** குறு வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் **01** புள்ளியும் அரைகுறை விடைக்கு **1/2** புள்ளியும் வழங்கப்படும். **சகல** வினாக்களுக்குமான குறு விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி, அதனைப் பகுதி **B, C** ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **B** யிலிருந்தும் **C** யிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

**1.** "மக்கள் இரு வேறுபட்ட வழிமுறைகளினூடாக அரசியலைப் பயில்கின்றனர் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது." அவ் **இரு** வேறுபட்ட வழிமுறைகளையும் குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

**2.** (i) "அரசு மனிதனின் இயற்கையான சேரிடமாகும். ஏனெனில் அவன் ஓர் அரசியல் பிராணியாக இருப்பதனாலாகும். அரசுக்கு வெளியே ஒருவன் வாழ்வானாயின் ஒன்றில் அவன் ஒரு மிருகமாகவோ, கடவுளாகவோ அல்லது மனிதத்துவத்துக்குக் கீழ்ப்பட்டவனாகவோ, மேற்பட்டவனாகவோ இருக்க வேண்டும்."

(ii) "மனிதன் சுதந்திரமாகப் பிறந்திருப்பினும் அவன் எங்கனும் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான்."

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுகளும் முன்வைக்கப்பட்டுள்ள **இரு நூல்களின்** பெயர்களையும் அவற்றின் **ஆசிரியர்களின்** பெயர்களையும் குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

**3.** (i) குடியரசு (ii) அரசியல் இலக்கணம்

ஆகிய நூல்களின் ஆசிரியர்களின் பெயர்களை முறையே குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

**4.** மாக்சியவாதிகளின் கருத்துப்படி முதலாளித்துவச் சமூகம் இரு முரண்பட்ட சமூக வர்க்கங்களைக் கொண்டுள்ளது. அவ் **இரு** வர்க்கங்களையும் பெயரிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

[பக். 2 ஐப் பார்க்க

**5.** ஒரு நாட்டின் அரசாங்கம் ஒரு யாப்பினடிப்படையில் செயற்படும்போது அங்கு யாப்போடு தொடர்பான இரு முக்கிய சட்டமுறை ஏற்புகள் காணப்படுகின்றன. அவ் **இரு** சட்டமுறை ஏற்புகளையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**6.** ஒற்றையாட்சி அரசாங்கம் **இரு** பிரதான அடிப்படைக் காரணிகளின்படி சமஷ்டி அரசாங்கத்திலிருந்து வேறுபடும். அவற்றைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**7.** ஜனநாயக அரசுகளில், நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமிக்கும் வழிமுறைகளுள் **இரண்டு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**8.** ஓர் அரசின் இறைமை **இரு** பகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**9.** ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தையும் சர்வதேச நீதிமன்றின் நீதிபதிகளையும் நியமிப்பதில் கூட்டாகப் பங்கேற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் **இரண்டு** உறுப்பமையங்களையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**10.** இந்தியாவில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்வாளர் கழகத்தில் இரு வகையான உறுப்பினர்கள் அங்கம் பெறுகின்றனர். அவ் **இரு** வகையான உறுப்பினர்களையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**11.** 1833, 1911, 1920, 1924 ஆகிய யாப்புச் சீர்திருத்தங்களின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட மன்றங்கள் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. அவ் **இரு** வகையினரையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**12.** டொனமூர் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த அரசாங்க சபை 61 உறுப்பினர்களைக் கொண்டிருந்ததோடு அவர்களுள் 58 பேர் இரு வழிமுறைகளில் தெரிவு செய்யப்பட்டனர். அவ் **இரு** வழிமுறைகளையும் அவர்களின் **எண்ணிக்கையையும்** தனித்தனியாகக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**13.** 1948 சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் இரு வழிமுறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ் **இரு** வழிமுறைகளையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

[பக். 3 ஐப் பார்க்க

**14.** 1948 சோல்பரி யாப்பிலும் 1972 முதலாம் குடியரசு யாப்பிலும் நாம நிர்வாகியைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வப் பதவிப் பெயர்களை ஒழுங்குமுறையில் பெயரிடுக.

(1) ............................................................................................................

(2) ............................................................................................................

**15.** (i) 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியல் யாப்பு நீதிமன்றின் உறுப்பினர்களின் **அமைவுச் சேர்க்கையைக்** குறிப்பிடுக.

(ii) அந்நீதிமன்றம் யாப்பு சார் விடயங்கள் குறித்த வழக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்படும்போது பங்குபற்ற வேண்டிய **நீதிபதிகளின் எண்ணிக்கையைக்** குறிப்பிடுக.

(1) ............................................................................................................

(2) ............................................................................................................

**16.** 1978 யாப்பில் அரச கரும மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள **இரு** மொழிகளையும் பெயரிடுக.

(1) ............................................................................................................

(2) ............................................................................................................

**17.** 1978 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டிருக்கும் **இரு** மேனிலை நீதிமன்றுகளையும் அவற்றின் **அமைவுச் சேர்க்கையையும்** குறிப்பிடுக.

1. ............................................................................................................

2. ............................................................................................................

**18.** 1978 யாப்பின் கீழ் பின்வரும் ஆட்சேபனை மனுக்களை விசாரணை செய்வதற்குத் தாபிக்கப்பட்டுள்ள **இரண்டு** நீதிமன்றங்களையும் ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(i) ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு

(ii) பாராளுமன்றத் தேர்தல் ஆட்சேபனை மனு

(1) ............................................................................................................

(2) ............................................................................................................

**19.** இலங்கையின் கட்சி முறை இரு பிரதான கட்சிகளை முதன்மைப்படுத்திய பல கட்சி முறை என்று கருதப்படுகிறது. அவ் **இரு** பிரதான கட்சிகளையும் பெயரிடுக.

1. ............................................................................................................

2. ............................................................................................................

**20.** 1978 யாப்பின் கீழ் பாராளுமன்றம் என்ற பெயரில் தாபிக்கப்பட்டுள்ள சட்டத்துறை இரு வேறுபட்ட வழிமுறைகளில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவ் **இரு** வகைகளையும் குறிப்பிட்டு, ஒவ்வொரு வழிமுறையிலும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் **எண்ணிக்கையையும்** குறிப்பிடுக.

(1) ............................................................................................................

(2) ............................................................................................................

* *



இங்கே வெட்டி அகற்றவும்

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

19421

**அறிவுறுத்தல்கள்:**

※ **B** மற்றும் **C** பகுதிகளிலிருந்து **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி B

**1.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளை ஆராய்க.

(i) அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்துக்குமுள்ள வேறுபாடுகள்

(ii) மக்கள் அரசியலைப் படிக்கும் வழிமுறைகள்

(iii) அரசின் தோற்றம், வளர்ச்சி, எதிர்காலம் என்பன பற்றிய தாராளவாத **அல்லது** மாக்சீயவாத கருத்துகள்

(iv) அரசறிவியலைக் கற்பதற்கான நடத்தைவாத **அல்லது** சமூகவியல் அணுகுமுறையின் பிரதான பண்புகள்

(v) அரசியல் பங்கேற்பை நிர்ணயிக்கும் காரணிகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

**2.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளைப் பரிசீலிக்குக.

(i) அரசும் அரசாங்கமும்

(ii) அரசும் சமூகமும்

(iii) நலன்புரி மற்றும் குறைந்தபட்ச அரசுகளுக்கிடையிலுள்ள வேறுபாடுகள்

(iv) ஜனநாயக மற்றும் அனைத்தாண்மை அரசாங்க முறைகளுக்கிடையிலான வேறுபாடுகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளை ஆராய்க.

(i) பிரித்தானிய மகா இராணியாரின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை

(ii) இந்திய சமஷ்டி அரசாங்க முறையில் சட்டத்துறை - நிறைவேற்றுத்துறைத் தொடர்புகள்

(iii) ஐந்தாம் குடியரசின் கீழ் பிரான்சிய ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும்

(iv) சுவிட்சர்லாந்தின் மத்திய அரசாங்கத்தின் சமஷ்டிப் பேரவையின் அதிகாரங்களும் பணிகளும்

(v) அமெரிக்க அரசாங்கத்தில் செனெற் சபையின் வகிபங்கு (10 × 2 = 20 புள்ளிகள்)

**4.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளைப் பற்றிக் கருத்துரைக்குக.

(i) சர்வதேச அரசியலின் இயல்பு

(ii) பொதுக் கொள்கை வாழ்க்கை வட்டம்

(iii) மோதல் தடுப்புக்கும் மோதல் முகாமைத்துவத்துக்குமுள்ள வேறுபாடுகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

## பகுதி C

**5.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளை ஆராய்க.

(i) 1833 கோல்புருக் - கமரன் சிபார்சுகள்

(ii) 1924 மனிங் - டெவன்ஷியர் சீர்திருத்தத்தின் பிரதான பண்புகள்

(iii) இலங்கைத் தேசிய இயக்கத்தின் இயல்பு

(iv) இலங்கை இடதுசாரி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (10 × 2 = 20 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளைப் பகுத்தாய்க.

(i) டொனமூர் யாப்பின் கீழ் தேசாதிபதியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை

(ii) 1948 யாப்பின் கீழ் நாம நிர்வாகியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை

(iii) 1972 யாப்பின் கீழிருந்த சட்டத்துறையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை

(iv) 1978 யாப்பின் கீழ் நிறைவேற்றுத்துறை - சட்டத்துறைத் தொடர்புகள்

(v) 1978 யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ள விகிதசமப் பிரதிநிதித்துவ முறையின் நிறைகளும் குறைகளும் (10 × 2 = 20 புள்ளிகள்)

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளைப் பற்றிக் கருத்துரைக்குக.

(i) இலங்கையின் அரசியல் கட்சி முறையின் பிரதான பண்புகள்

(ii) இலங்கையில் மாகாண ஆளுனரின் அதிகாரங்களும் பணிகளும்

(iii) 1978 யாப்பிற்கான 18வது திருத்தம்

(iv) 1978 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள உயர் நீதிமன்றின் அதிகாரங்களும் பணிகளும்

(v) இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழு (10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளைப் பற்றிச் சுருக்கமாகக் கருத்துரைக்குக.

(i) பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியச் சங்கத்தின் (சார்க்) மூலக்கொள்கைகளும் நோக்கங்களும்

(ii) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பொதுச் சபையின் அதிகாரங்களும் பணிகளும்

(iii) சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் (ICRC) வகிபங்கு

(iv) சர்வதேச மன்னிப்புச் சபையின் வகிபங்கு (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *